

நாகப்பட்டினம் சிறு துறைமுகத்தில் நடைபெற்று வரும் பணிகள் ஆய்வு மற்றும் நாகப்பட்டினம் (இந்தியா) காங்கேசன்துறை (இலங்கை) பயணியர் படகு போக்குவரத்து துவங்குதல் தொடர்பாக ஆய்வு கூட்டம் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் 20.09.2023 அன்று நடைபெற்றது. உடன் கூடுதல் தலைமை செயலர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு தாட்கோ கழக தலைவர் உ.மதிவாணன் அவர்கள், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி. நாகை மாலி, தமிழ்நாடு கடல்சார் வாரியம் துணைத்தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் எஸ்.நடராஜன், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன், நாகப்பட்டினம் துறைமுக அலுவலர் கேப்டன் ஜோ.மானேக்ஷா ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு அரசு பொதுநூலகத்துறை பணியாளர் கழகம் சி & டி மாநில தலைவர் மு. ராஜேஷ்குமார் 19.09.2023 அன்று தலைமைச் செயலகத்தில் நிதித்துறை அமைச்சர் மற்றும் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோரை சந்தித்து கோரிக்கை மனுஅளித்தார். இது குறித்து விரைவில் தமிழ்நாடு முதல்வர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து பரிசீலிக்கப்படுவதாக அமைச்சர்கள் தெரிவித்தார்கள். உடன் மாநில செயலாளர் கே.தீனதயாளன், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்றச்சங்க மாநிலத்தலைவர் கு.தியாகராஜன் ஆகியோர் இருந்தனர்.

### அனைத்துச் சாதியினர் அர்ச்சகர் திட்டம்!

# இந்தியா காணாத மாபெரும் புரட்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம் பாராட்டு!

திருவண்ணாமலை, செப்.23-

"அனைத்துச் சாதியினர் அர்ச்சகர் திட்டம் இந்தியா காணாத மாபெரும் புரட்சித் திட்டம்" என்று அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு நியமன அர்ச்சகர்கள் சங்கம் ஆகியவை முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இது குறித்து அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கத்தலைவர் வா.ரங்கநாதன் தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் திட்டத்தில் ஒரு மாபெரும் புரட்சியைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு நிகழ்த்தியுள்ளது. தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளாக கலைஞர் வேதனை தெரிவித்த அனைத்து சாதி அர்ச்சகர் பிரச்சினை, கடந்த 50 ஆண்டுகளாகத் தொடர்ந்து நீடித்துவரும் பிரச்சினையாக உள்ளது. 1969ல் கருவறைத் தீண்டாமையை ஒழிக்க தந்தை பெரியார் போராட்டம் அறிவித்ததைத் தொடர்ந்து, பரம்பரை வழி அர்ச்சகர் முறையை ஒழித்து கலைஞர் சட்டம் இயற்றினார். அதனை எதிர்த்து சேஷம்மாள் உள்ளிட்ட பிராமணர்கள் உச்ச நீதிமன்றம் சென்றனர். 1972ல் சேஷம்மாள் தீர்ப்பு வந்தாலும், ஆகமத்தை மீறக்கூடாது என்றும் தீர்ப்பில் சொன்னதால், அர்ச்சகர் நியமனம் செய்ய இயலவில்லை.

தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் தைத்திருந்த அந்த முள்ளை அகற்றிடும் வகையில் கலைஞர் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியைத் தொடங்கியதால் தி.மு. கழகம் 2006 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 23.5.2006 அன்று அரசாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. அதன்படி தகுதியும் திறமையும் பெற்ற அனைத்து இந்துக்களும் சாதி பாகுபாடின்றி திருக்கோவில்களில் அர்ச்சகர்களாக ஆவதற்கு வழிவகை செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 34 மாணவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த 76 மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த 55 மாணவர்கள், இதர வகுப்பைச் சேர்ந்த 42 மாணவர்கள் மொத்தம் 207 மாணவர்கள் பயிற்சியை முடித்து சான்றிதழ் பெற்றுள்ளனர்.

மாணவர்கள் ஆகமம், வேதம், மந்திரம் கற்று தீட்சை பெற்றனர். மீண்டும் உச்ச நீதிமன்றம் சென்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சிவாச்சாரியார்கள் தடை வாங்கினர். 2009ல் அர்ச்சகர் பயிற்சி முடித்த பிறகு, அனைத்து அரசியல் கட்சிகளையும், இந்து மத அமைப்புகள் சார்ந்த கட்சிகளையும் சந்தித்து எங்களின் பிரச்சினைகளைக் கூறினோம். ஆனால், இந்து அமைப்புகள் யாரும் எங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. எங்களுக்கு திராவிட இயக்கங்களும், கம்யூனிஸ்ட் அமைப்புகளும், முற்போக்கு அமைப்புகளும், மக்கள் உரிமை பாதுகாப்பு மையமும், மக்கள் கலை இலக்கிய கழகம் அமைப்புகளும் ஆதரவு தெரிவித்தன.

எங்களுடைய வழக்குக்காக தெருமுனைகளிலும், பேருந்து நிலையங்களிலும், கடை வீதிகளிலும், சாலைகளிலும், அனைத்து இடங்களிலும் வசூல் செய்தும், கருவறையில் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்பதற்கான உண்ணாவிரதப் போராட்டம், சாலை மறியல், கருவறையில் நுழையும் போராட்டம் போன்ற அனைத்துப் போராட்டங்களில் ஈடுபட்டும், தற்போது வரை எங்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இவர்கள்தான் பெரும்பான்மையான இந்துக்களுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் படிக்கும்போது நாங்கள் அனைவரும் சாதி ரீதியாக அவமானப்பட்டு, அசிங்கப்படுத்தப்பட்டோம். எங்களுக்குப் பயிற்சி கொடுத்த தலைமையாசிரியர் மற்றும் ஆகம ஆசிரியர் தாக்கப்பட்டனர். இவ்வாறு பல இடையூறுகளைக் கடந்து, ஆகமக் கோயில்களில் முறையாகத் தமிழ் முறைப்படி, சமஸ்கிருத, வேத மந்திரங்களும் முறைப்படி கற்று தீட்சை பெற்றோம். இன்று ஆகமக் கோயில்களில் பூஜை செய்வதற்கான தகுதியோடு நாங்கள் இருக்கிறோம்.

2015-ஆம் ஆண்டு தீர்ப்பு வந்தது. அ.தி.மு.க. ஆட்சியில் அர்ச்சகர் நியமனம் நடைபெறவில்லை. 2021-இல் முதல்வராகப் பொறுப்பேற்ற மு.க. ஸ்டாலின், ஆகஸ்ட் 14 அன்று பதவியேற்ற நூறாவது நாளில், அனைத்து இந்துக்களையும் ஆகமக் கோயில்கள் உள்ளிட்ட பல தமிழக கோயில்களில் அர்ச்சகர்களாக நியமித்தார். பெண் ஓதுவாரையும் நியமித்தார். இதனை எதிர்த்தும், அர்ச்சகர் விதிகளை எதிர்த்தும் 30-க்கும் மேலான வழக்குகள் தொடுக்கப்பட்டன. திருக்கோயில்களில் பணி நியமனம் செய்யப்பட்ட 24 அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி மாணவர்களைச் சாதி ரீதியாக அவமானப்படுத்துவதும், கொச்சை சொற்களைக் கொண்டு பேசுவதும், கொலை மிரட்டல் விடுவதுமான செயல்களைப் பிராமணர்களும், பிஜேபி, ஆர்.எஸ்.எஸ், விஷ்வ இந்து பரிஷத் போன்ற இந்து அமைப்புகள் செய்து வந்தன. தொடர்ச்சியாக 2021 முதல் மிரட்டல் விடுக்கப்பட்டு, இதில் 5 மாணவர்கள் தற்கொலை செய்வதற்கு முடிவெடுத்ததாகவும், 5 மாணவர்கள் பணியை விட்டுச் செல்வதாகவும் கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, 26.03.2022 முதல் இன்று வரை தமிழ்நாடு முதலமைச்சரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் இதற்குத் தீர்வு காணும் வகையில், உடனடியாக நடவடிக்கை எடுத்ததால், தற்போது பணி நியமனம் செய்யப்பட்ட அனைத்து அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி மாணவர்களும் திருக்கோயில்களில் பணிபுரிந்து வருகின்றனர். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தின் கீழ் பயின்ற மாணவர்கள் மூலம் இந்தத் திட்டம் நிறைவேறக் கூடாது என்பதற்காக, பிஜேபி, ஆர்.எஸ்.எஸ், விஷ்வ இந்து பரிஷத் போன்ற இந்து அமைப்புகள், பயிற்சி பெற்ற மாணவர்களுக்கும், அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத்திற்கும், கொலை மிரட்டல்கள் விடுத்தும், அச்சுறுத்தியும், சமூக வலைத்தளங்களில் அவதூறுகள் பரப்பியும் வருகின்றன.

உச்சநீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றங்களிலும் 50க்கும் மேற்பட்ட வழக்குகள் மாதந்தோறும் வந்த வண்ணம் உள்ளன. கருவறையில் தீண்டாமையை உறுதிப்படுத்த வேண்டும் என்பதற்காகப் பல இந்து அமைப்புகள், பல எதிர்ப்புகளும் தடைகளும் செய்து வருகின்றனர். இதுதான் சனாதனம். அந்த வழக்குகள் இந்து சமய அறநிலையத்துறையால் முறியடிக்கப்பட்ட நிலையில், திருச்சி வயலூர் முருகன் கோவில் அர்ச்சகர் நியமனத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

மதுரை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் குறிப்பிட்ட denomination என்று சொல்லக்கூடிய மத உட்பிரிவினரைத் தவிர மற்றவர்களை ஆகமக் கோயில்களில் அர்ச்சகராக நியமிக்க முடியாது எனச் சொல்லி அர்ச்சகர் நியமனத்தை ரத்து செய்தார். அதற்கு எதிராக இந்து சமய அறநிலைத்துறை சார்பில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு தடையாணை பெறப்பட்டுள்ளது.

அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் 2022 -2023 ஆம் ஆண்டு இரண்டாம் ஆண்டு மாணவர்கள் இட ஒதுக்கீடு அடிப்படையில் OC (4), BC (38), MBC (31) மற்றும் SC (21) ஆகும். இச்சூழலில் மீண்டும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளுக்கு உயிர் கொடுக்கப்பட்டு 94 பேர், குறிப்பாக மூன்று மாணவிகள் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்பட்டு ஓராண்டு அர்ச்சகர் படிப்பை, சென்ற வாரம் முடித்து சான்றிதழ்கள் பெற்றுள்ளனர். தற்போது நடப்பு கல்வியாண்டு 2023 - 2024 ஆம் ஆண்டில் 111 மாணவர்கள் அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் பயின்று வருகின்றனர். இவற்றில் 11 மாணவிகள் ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் பயின்று வருகின்றனர்.

அர்ச்சகர் நியமனங்களிலும், அர்ச்சகர் பயிற்சிகளிலும் பாலின சமத்துவத்தை உருவாக்க "கரு சுமக்கும் பெண்களும் இனி கருவறைக்குச் செல்லலாம்" எனத் தமிழ்நாட்டு பெண்களைப் போற்றும் வகையில், திருக்கோயில்களில் பாலின பாகுபாடின்றி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி மற்றும் அர்ச்சகர் பணி நியமனத்திற்குத் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசு பல நல்ல திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. ஆனால் இதனை எதிர்த்துப் பல இந்து அமைப்பு கட்சிகளும், இந்து அமைப்புகளும் தடைகள் பல தந்து வருகிறார்கள்.

அனைத்து இந்துக்கள் அர்ச்சகர் போராட்டத்தில், கருவறை தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில், இதுவரையிலான கோரிக்கை என்பது, அனைத்து இந்துக்களும், அதாவது அனைத்து ஆண்களும் அர்ச்சகராக வேண்டும் என்பதுதான். தற்போது நிகழ்ந்துள்ள மாபெரும் புரட்சி என்னவென்றால் அர்ச்சகர் நியமனத்தில் பாலின பேதமும் தகர்க்கப்பட்டுள்ளது என்பதே. 3 மாணவிகள் மாபெரும் கனவோடு அர்ச்சகர் படிப்பை முடித்துள்ளனர்.

அடுத்து அர்ச்சகர்களாக நியமனம் பெறக் காத்திருக்கிறார்கள். பெண்கள் அர்ச்சகராக நியமிக்கப்பட்டால் இந்திய வரலாற்றில், ஏன் உலக வரலாற்றிலேயே மாபெரும் சமத்துவப் புரட்சியாக நிலைத்து நிற்கும். ஆனால் ஆலயங்களில் சமத்துவத்தை விரும்பாத, ஏற்கனவே கோயில்களைத் தங்களின் சொந்த சொத்தாகக் கருதும் பிராமண அர்ச்சகர்கள், இந்த மாபெரும் சமத்துவப் புரட்சியை ஏற்கவில்லை. கோயில்கள் மீதான தங்கள் அதிகாரம் பறிபோகும் எனக் கருதிப் பதறி, உடனே மதுரை உயர் நீதி மன்றத்திலும், உச்சநீதி மன்றத்திலும், அர்ச்சகர் படிப்பு முடித்துள்ளோருக்கு கோயில்களில் பயிற்சி அளிக்கக் கூடாது என்று வழக்குகள் கொடுத்துள்ளனர்.

இந்த வழக்குகளை முறியடிக்க இந்து சமய அறநிலையத்துறை தீவிரமாக முயற்சித்து வருகிறது. எல்லோரும் இந்துக்கள், எல்லா இந்துக்களும் சமம், சனாதன தர்மம் எல்லா இந்துக்களையும் சமமாக கருதுகிறது என்றெல்லாம் பேசும் ஆர்எஸ்எஸ், பாஜக, விசுவ இந்து பரிசத், சங் பரிவார் அமைப்பினர், குறிப்பாக மோடி, அமித்ஷா, அண்ணாமலை போன்றோர் ஆலயங்களில் அனைத்து இந்துக்களும், குறிப்பாக இந்து பெண்களும் அர்ச்சகராவதற்கு என்றாவது பேசியுள்ளார்களா? சபரிமலையில் பெண்களை அனுமதிக்க வேண்டும் என்ற உச்சநீதி மன்றத் தீர்ப்பை இன்று வரை நடைமுறைப்படுத்த விடாமல் தடுக்கும் சனாதன வாதிகள் தான் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வினர்.

தமிழ்நாட்டில் மதுரை, திருவரங்கம், திருச்செந்தூர், பழனி, திருவண்ணாமலை உள்ளிட்ட பெரிய கோயில்களில் இன்று வரை தமிழர்கள், குறிப்பாகக் கவுண்டர், தேவர், வன்னியர், செட்டியார், நாடார், கோனார், தேவேந்திரர், ஆதிதிராவிடர், அருந்ததியர் உள்ளிட்ட எவரும் அர்ச்சகராக முடியவில்லை என்ற நிலை, சுதந்திரம் பெற்று அரசியல் சட்டம் வந்து 70 ஆண்டுகள் ஆன பின்பும் நீடிப்பது அவமானகரமானது. இந்த அவமானத்தைத் தமிழ்ச் சமூகத்தின் மீது சுமத்தும் கூட்டம் ஆயிரமாண்டு காலமாக கோயில்களைத் தங்கள் அதிகார பீடமாக வைத்திருக்கும் பிராமண அர்ச்சகர்கள் தான்.

அரசிடம் சம்பளம் பெறும் இவர்கள்தான், இன்றும் இந்து சமய அறநிலைத்துறையை இயங்கவே விடாமல் நூற்றுக்கணக்கான வழக்குகள் போட்டுத் தடுத்து நிறுத்தி வைத்திருப்பவர்கள். தந்தை பெரியார் பிறந்த இந்நன்னாளில், தமிழ்நாடு மக்கள் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., பிராமண கூட்டத்தின் இரட்டை வேடத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்து பெரும்பான்மை மக்களின் நலனுக்காக இட ஒதுக்கீடு முதல் கோயில் அர்ச்சகர் வரையிலான திட்டங்களைச் செயல்படுத்தி வருவது திராவிட இயக்கங்கள் தான். குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

ஆலயங்களில், சாதி, பாலின சமத்துவத்திற்கு அரசியல் சட்டம் வலியுறுத்தும் சமத்துவ சமுதாயத்திற்காக, குறிப்பாக அரசியல் சட்டத்தில் பிரிவு 25 2(b)யின் அடிப்படையில் இந்து சமய மத நிறுவனங்களை எந்த வேறுபாடும் இன்றி அனைத்து மக்களுக்கும் திறந்து வைக்க வேண்டும் என்ற அம்பேத்கரின் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபுவுக்கும் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்களுக்கும் வாழ்த்துகளையும் நன்றியையும் உரித்தாக்குகிறோம்.'

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### மகளிர் மசோதாவில் சமூகநீதி இடம்பெறவில்லை - எத்தனைக் காலம்தான் ஏமாற்றுவர்?

# பா.ஜ.க. வை வரும் தேர்தலில் மகளிர் தோற்கடிக்கவேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை

சென்னை, செப். 23-

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடந்த 13 ஆண்டுகளுக்குமேல், நிறைவேற்றப்படாமல் கிடப்பில் போட்டு வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதிகளில் மகளிருக்கான 33 சதவிகித இட ஒதுக்கீடு மசோதா புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் கூடிய முதல் கூட்டத்தில், மக்களவையில் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்பது முழு மகிழ்ச்சிக்கும், உண்மையான வரவேற்புக்குரியதாகவும் அமையவில்லை என்பதே அப்பட்டமான உண்மையாகும்.

காரணம், இது மகளிருக்கு உடனடியாகப் பயன்படக் கூடியதாக இல்லை. இதனுள் பொதிந்துள்ள ஆபத்து. அது வருகின்ற பொதுத் தேர்தலில் நடைமுறைக்கு வராது வர முடியாது என்று அம்மசோதாவிலேயே (15 year sunset clause என்ற ஒன்றுடன்) கூறப்பட்டுள்ளது!

நிறுத்தி வைக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு (சென்சஸ்) முடிந்து, அதன்பிறகும் தொகுதி மறுவரையறை (Delimitation) முடிந்து, அதன் பிறகே அது நடைமுறைக்கு வர முடியும் என்பது மகளிருக்கு அது ஒரு கானல் நீர் வேட்டை போல ஆக்கப்பட்டுள்ளது!

இப்போது இப்படி அவசரமாக 5 நாள் கூட்டம்; அதில் இந்த மசோதா தாக்கல் செய்யப்படும்வரை ரகசியமாக வைத்திருந்து, இந்தச் சூழ்ச்சிப் பொறிகளை வைத்து, வரும் 2024 இல் அதை ஆவலோடு எதிர்பார்த்த மகளிருக்குக் கிடைக்கவிடாமல், 2029 அய் எதிர்நோக்கும் வண்ணம் ஏமாற்று வேலை படமெடுத்தாடுகிறது!

உண்மையில் இது மகளிர் உரிமையைப் பாதுகாக்கவோ, உரிய பிரதிநிதித்துவம் நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் மகளிர் பெறவோ கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட வில்லை!

மகளிர் 33% இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வராது மசோதாவே கூறுகிறது!

மாறாக, வரும் 2024 இல் தோல்வி அச்சத்தின் உச்சத்தில் இருக்கும் பிரதமர் மோடி தலைமையிலான ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. ஆட்சி மீண்டும் சிம்மாசனம் பெற இதுவாவது மகளிரின் வாக்குகளாவது கைகொடுக்காதா என்பதற்காகவே இந்தப் புது வியூகம் வித்தை எல்லாம்!

மகளிரைக் காப்பாற்ற அல்ல; அவர்களுக்கு உரிமை தர அல்ல; தங்களது கட்சிக்குத் தோல்வி ஏற்படக்கூடும் என்ற பயத்தின் காரணமாகவே இப்படி ஒரு 'வானவில்' காட்சி!

இதை நமது தி.மு.க. தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்பட பல முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களும் இதனை சுட்டி க்காட்டியுள்ளனர் மிகப் பொருத்தமாக. அது மட்டுமா?

இவ்வளவு காலம் அது தடைபட்டு நிறைவேறாமல் வைக்கப்பட்டிருந்ததற்கு முக்கிய காரணமே, அது வெறும் பாலியல் நீதியாக மட்டும் அமையாமல், சமூகநீதி இணைந்த பாலியல் நீதியாகவும் அமையவேண்டும்(Gender Justice Combined with Social Justice) என்பதால் தானே!



மக்கள் சதவிகிதத்தில் மிகப் பெரும்பாலோரான மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகப் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் (Adequate representation) நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளில் கிடைக்க அம்மசோதாவினை உரிய காலத்தில் அமலாக்காததே காரணம் என்பதை நாடும், பிற்படுத்தப்பட்ட சமூக மகளிரும் மறப்பார்களா? தங்கள் உரிமைகளைத் துறப்பார்களா?

எஸ்.சி., எஸ்.டி., தொகுதிகள் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்கெனவே உள்ளதால், அதில் இவர்கள் மாற்றம் செய்ய முடியாது; ஆனால், ஓ.பி.சி., எம்.பி.சி., ஆகிய சமூகப் பெண்களின் பிரதிநிதித்துவம் கிட்ட வேண்டாமா? அதற்கு இம்மசோதாவில் இடம் இல்லையே!

அதுமட்டுமல்ல, ஆர்.எஸ்.எஸ். மற்றொரு உள்நோக்கத்தையும் தனது திட்டமாகக் கொண்டு, வடபுல ஹிந்தி மாநிலங்களின் தொகுதிகளை அதிகரித்து, தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் குடும்பக் கட்டுப்பாடு கொள்கையை சிறப்பாக அமல்படுத்தியதால், அதன் தற்போதைய தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைத்து, வடக்குத் தெற்கு பேத இடைவெளியை அதிகப்படுத்திட ஒரு பெரும் சூழ்ச்சியும் உள்ளே இத்திட்டத்திற்குப் பின் புதைந்துள்ளது (Delimitation க்குப் பின்) அதை நன்கு புரிந்தே நமது தமிழ்நாட்டின் முதலமைச்சர் தமிழ்நாட்டிற்குரிய தொகுதிகள் ஒருபோதும் குறைக்கப்பட அனுமதிக்க முடியாது என்று வருமுன்னரே தடுப்பு முறையை ஏற்படுத்தத் தக்கபடி எச்சரித்துள்ளார்!

### 2024 இல் மக்கள் தீர்ப்பு அளிப்பார்கள்!

'திராவிட மாடல்' சொன்னதை உடன் செய்துகாட்டும் 'குஜராத் மாடலோ' நீரில் எழுதி, இப்படி வித்தை காட்டுகிறது!

இதை மக்கள் புரிந்து 2024 இல் பதிலடி கொடுத்துப் பாடம் புகட்டுவர்!

ஒரு திரைப்படத்தில் வரும் வசனம்போல, "வரும், ஆனால், வராது" என்பது போல கேலிக் கூத்து இப்போது நடைபெற்றுள்ளது!

பெண்களின் வாக்குகளை வாங்கித்தான் ஆட்சிக்கு வருவதால், அவர்களைக் கடவுளாக்குவது போல 'நாரி சக்தி' அப்படியெல்லாம் மசோதாவிற்குப் பெயரிட்டு, நடைமுறையில் அவர்களுக்கு 2024 இல் கிடைப்பது மோடி ஆட்சியால் வெறும் அல்வாதான்! மிஞ்சியது ஏமாற்றம்தான்! வெறும் கானல் நீர் வேட்டைதான்!

எத்தனை காலம்தான் இப்படி ஏமாற்றம் தொடரும் என்பதால், 2024 இல் மகளிர் நல்ல தீர்ப்பளிப்பார்கள் என்பது நிச்சயம்!

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### நிலவின் பயணத்தைப் பற்றி சங்க இலக்கியங்களில் காணலாம்!

# சந்திரயான் 3: நாட்டிற்கு புதிய அத்தியாயத்தைத் திறந்திருக்கிறது!

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் பேச்சு!

புதுடெல்லி,செப்.23-

"சந்திரயான் 3- நாட்டிற்கு புதிய அத்தியாயத்தைத் திறந்திருக்கிறது" என்று நாடாளுமன்ற மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் புகழாரம் சூட்டினார்.

இது குறித்து மக்களவையில் எஸ். ஜெகத்ரட்சகன் பேசியதாவது:

கி.பி. 1670-ல் கலிலியோ வான் நிலவை தன் ஆராய்ச்சி மூலம் கண்டறிந்தார்

ஆனால் நமது தமிழ்க் கவிஞர்களும் அறிஞர்களும் 2ஆம் நூற்றாண்டிலேயே நிலவின் பயணத்தைப் பற்றிப் பேசியவர்கள் என்பதை நம் தமிழ் இலக்கியங்களில் காணலாம். தமிழ்ச் சங்கப் புலவர்கள் நிலவு உட்பட வானில் உள்ள பல்வேறு கோள்கள் மற்றும் விண்மீன்களைப் பற்றிப் பாடியுள்ளனர்.

1930 களில் நமது மகாகவி பாரதியார் தனது புதிய "ஆத்தி சூடி"யில் நிலவை ஆராய்வோம் என்று பாடினார்.

**கண்ணதாசன் பாடல்!**

அதேபோல் 1964 ஆம் ஆண்டு வாக்கிலேயே இதை கணித்தவர் நமது மாபெரும் கவிஞர் கண்ணதாசன். அவரது பாடலில் 'சந்திரனைத் தேடிச் சென்று குடியிருப்போமா......

தமிழுக்குச் சேதி சொல்லி அழைத்துக் கொள்வோமா



..... என குறிப்பிடப்பட்டு இருக்கும்.

இதன் பொருள்: சந்திரனைத் தேடிச் சென்று வாழ்வோம் அங்கு வந்து எங்களுடன் இருக்கும்படி நமது தமிழ் மொழியை அழைப்போம்; என்றார்.

நிலவு ஆராய்ச்சிக்காக முன்னோடி முயற்சியாக 1984 இல் ஸ்ரீ ராகேஷ் சர்மாவை சந்திரனுக்கு அனுப்பினார் நமது மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையார்

இந்தியாவின் அழகை விண்வெளியில் இருந்து பார்த்ததைப் பற்றி ஸ்ரீ ராகேஷ் சர்மா அம்மையார் இந்திரா காந்திக்கு விளக்கிய நினைவுகள் நம் அனைவருக்கும் இன்னும் நினைவிலிருக்கிறது.

எனவே நாம் சந்திரனை ஆராய்வதற்கான மேற்கொண்ட முயற்சிகளுக்கு நீண்ட வரலாறு உள்ளது.

அது வரலாறாக இருந்தாலும் சரி, அரசியலாக இருந்தாலும் சரி, தெற்கு எப்போதும் சிறப்பு வாய்ந்தது.

**வளரும் நாடாக பெருமை கொள்கிறது!**

அதே போல் இந்தியாவின் மூன்றாவது சந்திரப் பயணமான சந்திரயான்3, நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறக்கிய முதல் நாடு என்ற பெருமையை நம் இந்தியா உருவாக்கி இருக்கிறது.

சந்திரயான் 3 ஆய்வு நிலவின் வரலாறு மற்றும் நிலவில் உள்ள நீர் மற்றும் கனிம வளங்களின் தேடல் மற்றும் பிற பொருட்கள் பற்றி ஆய்வு மேற்கொள்வது மட்டுமன்றி இந்த பணியை தொடங்கும் நான்காவது நாடாகவும், இதை வெற்றிகரமாக நிறைவேற்றிய மூன்றாவது நாடாகவும், இதை அடைந்த முதல் வளரும் நாடாகவும் நம்மை பெருமை கொள்ளச் செய்கிறது.

நம் தொழில்நுட்ப ரீதியான வலிமையையும், நிலவில் மென்மையான தரையிறக்கம் செய்யக்கூடிய நுண்ணிய தொழில்நுட்பங்களின் திறமையையும் இந்த சாதனை உலகுக்கு பறை சாற்றுகிறது. அதே சமயம் இந்த சாதனை குறைந்த பொருள் செலவில் அடையப்பட்டுள்ளது. நிலவின் தென் துருவத்தில் மென்மையாக தரையிறங்க எந்த நாடும் முயற்சித்ததில்லை:

அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா ஆகியவை நிலவின் பூமத்திய ரேகைப் பகுதியில் மென்மையாக தரையிறங்க முயற்சித்தன, ஆனால் நிலவின் தென் துருவப் பகுதியில் அதை முயற்சிப்பது கரடுமுரடான நிலப்பரப்பு காரணமாக கடினமாகக் கருதப்பட்டது. இதை நாம் சாதித்துள்ளதால், இந்தியாவுக்கு இது புதிய அத்தியாயங்களைத் திறந்திருக்கி றது.

சந்திரயான் பணியின் மொத்த செலவு சுமார் 650 கோடி, அதே சமயம் ஹாலிவுட் படமான அவதாரின் பட்ஜெட் சுமார் 1970 கோடி. இது நமது தன்னம்பிக்கை மற்றும் நமது சொந்த தொழில்நுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளின் வலிமையின் சான்றாகும்.

உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உருவாகி வரும் வேளையில் இந்த சாதனை நம் மேம்பட்ட தொழில்நுட்பத் திறனை இவ்வுலகிற்கு பறை சாற்றுகிறது. இலகுவான விண்வெளி ஏவுதலை ஊக்குவிப்பதற்கு இந்த சாதனை ஆவன செய்யும்.

இவ்வாறு எஸ்.ஜெகத்ரட்சகன் பேசினார்.